

**ஆசிரியர் மடல்**

# இயேசுவே மெய்யான ஒளி

**அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு,**

**இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

நான்கு அடி எடுத்து வைத்தது போல் இருந்தது. நான்காம் மாதம் வந்துவிட்டது.நாட்கள் வேகமாக ஓடுகிறது.இனி காலம் செல்லாது என்று அறிந்து அது தன் இயல்பான ஓட்டத்தின் வேகத்தை அதிகரித்துக் கொண்டது. ஆனால் தேவஜனமோ எல்லாம் அறிந்தும் ஓட்டத்தில் தொய்வு.வசனத்தின் மேல் வசனம் கேட்டும் உள்ளத்தில் சோர்வு. ஆராதனை அலுத்துப் போய் விட்டது.ஊழியம் உற்சாகம் இழுந்து விட்டது.அடுத்த கட்டம் என்னவென்று (தேவ) சட்டம் அறிந்தும், மேலே விட்டத்தை பார்த்துக்கொண்டு, விழி பிதுங்கி நின்றுகொண்டிருக்கிற நிலை.

அருமை ஜனமே! சோர்ந்து போகாதே! உன் பலவீனங்கள் உன்னை பக்கவாட்டில் இழுத்து படுக்க வைத்தாலும்,பக்கத்திலே இருக்கும் பரமனை பத்திரமாய் பிடித்துக்கொள் . நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று வாக்கு கொடுத்த தேவனல்லவா இவர்! விட்டு விடுவாரா இல்லை ..இல்லை **“ நீ காலாட்களோடே ஓடும் போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படி சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம்**

**தேடினால்,யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்? ”(எரேமியா 12 : 5).**

**யோர்தான் புரண்டு வரும்போது உனக்கு குதிரையின் ஓட்டம் அவசியமல்லவா! உன்னை இளைக்கப்பண்ணின தூசிகளை உதறி விட்டு எழுந்திரு. உன் பலவீனத்தையே உன் பலமாக பழக்கப்படுத்திக்கொள்.எதிராக எழும்பும் ஆயுதத்தை உனக்கு சாதகமாக ஆதாயப்படுத்திக்கொள்.அதுதான் தேவன் தருகிற ஞானம். கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்காதே! பதில் உனக்குள்ளேதான் இருக்கிறது. நாம் கால் வைத்திருக்கிற இந்த நான்காம் மாதம் நம் யாவருக்கும் நன்மையான மாதமாகவும் இருக்கும். நலமானதாயும் இருக்கும்.**


**நெகேமியா இரண்டாம் கட்டப் பணி, சில மாதங்களில் ஆரம்பிக்கப்படவேண்டும். ஜெபியுங்கள்.உதவிக்கரங்களை நீட்டுங்கள்.ஒரு குடும்பத்திற்கு 10,000/= ( பத்தாயிரம் ) என்று நியமித்திருக்கிறோம்.கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அநேக கரங்கள் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே இதை முடித்துவிடலாம். ஒருவருக்கொருவர் ஊக்கமாய் ஜெபிப்போம் .**


**கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்**

**பாஸ்டர் S. போஸ்கோ .**


**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**

**& 9283443230 (True Light Ministries)**
**Bank Transfer :**
**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**
**Our Website : www.truelightministry.org**
***17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .***





# மலைச் சிகரங்களின் வரிசை




மலைகள் என்பதே ஒரு ஆசீர்வாத மான படைப்பு.வேதம் முழுவதும் அநேக மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் காணமுடியும். அந்த தேசம் மலைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த தேசம் என்று தன்னுடைய பாதபடியாக்கின இஸ்ரவேல் தேசம், ஒரு மகா ஆசீர்வாதமான தேசம் என்று நம் எல்லோருக்கும் நன் றாகத் தெரியும். பள்ளத் தாக்குகளிலே பசும்புல் மேய்ச்சல், மலைகளிலே அரும்பெரும் பொக்கிஷங் கள், நல்ல செழுமையான வாசஸ்தலங்கள், இயற்கை யாக கிடைக்கிற பருவ சூழ்நிலைகள் ஏராளம்... ஏராளம்.. இவைக ளெல்லாம் பூமிக்குரியவைகள். வானத் திற்குரியவைகள் எவை? எவை? அதைத்தான் இந்த செய்தியிலே பார்க்கப் போகி றோம். முக்கியமான ஒரு சில மலைகளைப் பார்த்து அந்த வரிசையிலே நம்மையும் நிறுத்(து)திப் பார்ப்போம்.

**பள்ளத்தாக்குகளையும் காணமுடியும். அந்த தேசம் மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த தேசம் என்று தன்னுடைய பாதபடியாக்கின இஸ்ரவேல் தேசம் ஒரு மகா ஆசீர்வாதமான தேசம் என்று நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பள்ளத்தாக்குகளிலே பசும்புல் மேய்ச்சல், மலைகளிலே அரும்பெரும் பொக்கிஷங்கள், நல்ல செழுமையான வாசஸ்தலங்கள், இயற்கையாக கிடைக்கிற பருவ சூழ்நிலைகள் ஏராளம்... ஏராளம்.. இவைகளெல்லாம் பூமிக்குரியவைகள்.**

## 1.மோரியா

ஆபிரகாம் ஈசாக்கை பலியிடப்போன மலை இதுதான் என்று நிச்சயித்திருக்கிறார் கள். (ஆதியாகமம்22 : 2–14).தாவீது தேவ தூதனைக் கண்டபின் பலி செலுத்தின அர்வனாவின் களமும் இதுவே என்றும் பிந்தைய நாட்களில் சாலொமோன் தேவா லயத்தை கட்டினதையும் காண்பிக்கிறது (2 நாளா கமம் 3 : 1), கர்த்தரின் பர்வதம் என்று சங்கீதம் 24 : 3 யிலும்,ஏசாயா 2 : 3யி லும் சொல்லப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மலையில்தான் இரட்சகர் மனுக்குலத்தின் மீட்பிற்காக தொங்கினார். கொல்கொதாவும்கல்வாரி யும் இந்த மோரியா மலைப் பகுதிக்கு உட் பட்டதே.

மோரியா என்றால் "யோகோவா தெரிந்து கொண்ட" என்று அர்த்



தம். ‘**யேகோவா தெரிந்து கொண்ட** ’ என்ற அர்த்தம் கொண்ட இந்த மோரியாவில்தான் புறஜாதிகளுக்குள் அடைபட்டுக் கிடந்த ஆபிரகாமின் கீழ்படிதலால் கிடைக்கப்பெற்ற ஈசாக்கை, நம்ம பாஷையிலே சொல்வதென்றால் முரட்டு விசுவாசத்தினால் பலிபீடத்தில் பலியாக **அர்ப்பணித்தான்.** இது வேதப்புத்தகத்தின் துவக்கம்.

மனுக்குலத்தின் அறிவுக்கெட்டாத வகையில் ஒரு கன்னியின் வயிற்றில் கருவாகி உற்பவித்த இறைவன் **இயேசு** தன்னை ஒரு அடிமையாக இந்த பூமி என்ற தாழ்விடங்களில் தன்னை தந்தருளின தன் பிதாவின் சித்தத்திற்கு கீழ்படிந்தவராக, இந்த மனுக்குலத்தின் மீட்பிற்காக தன் ஜீவனையே தந்தருளின அர்ப்பணிப்பு.இது வேதபுத்தகத்தின் மையம்.

**நம்மில் துவக்கத்தில் இருந்த அர்ப்பணிப்பு இடையிலும் மாறக்கூடாது. முடிவிலும் மாறக்கூடாது. மாறினால் அது பரலோக இராஜ்யத்தின் பார்வைக்கு செல்லாக் காசு. முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்**

மிகுந்த கல்விமானும், செல்வந்தனும், இயேசுவின் பிள்ளைகளுக்கு மகா எதிரியுமான சவுல், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு பிடிபட்டபோது நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டறிந்து, அவரை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணி இயேசுவுக்காக இரத்த சாட்சியாக மரித்த பவுலாகிய சவுலின் அர்ப்பணிப்பு, இது வேதபுத்தகத்தின் இறுதி பக்கங்கள்.


நம்மில் துவக்கத்தில் இருந்த அர்ப்பணிப்பு இடையிலும் மாறக்கூடாது. முடிவிலும் மாறக்கூடாது. மாறினால் அது பரலோக இராஜ்யத்தின் பார்வைக்கு செல்லாக் காசு. **முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்** (மத் 24 : 13). ஆம், மோரியா கற்றுக்கொடுப்பது, ***We need a surrenderd life in Christ .***

## 2.கர்மேல்

**“ உன் சிரசு கர்மேல் மலையைப் போலிருக்கிறது, உன் தலைமயிர் இரத்தாம்பரமாயிருக்கிறது; ராஜா நடைக்காவணங்களில் மயங்கியிருக்கிறார் ”** (உன் 1 : 5).

கர்மேல் என்றால் ***(Garden of Grapes).*** திராட்சை கொடிகளால் படர்ந்த ஒரு தோட்டம். தலை மலையைப் போன்று இருந் தாலும் (மலையின் வடிவமைப்பு) அதின் மயிர் இரத்தாம்பர நிறத்தில் சிவப்பு குலை குலையாக தொங்கும் அடர்ந்த திராட்சை குலைகள் நிறைந்த ஒரு பெரிய பந்தலின் தோற்றம். **அங்கே மனமகிழ்ச்சியையும், இன்ப மயக்கத்தையும் தரும் திராட்சை ரசம்** (வசனம் 7 : 6).

ஆம், முதலாவது அர்ப்பணிப்பு என்றால் , மலைகளின் வரிசையில் இரண்டாவது மனமகிழ்ச்சி. ஒரு மனிதனின்



வாழ்க்கையில் நிறைவான மனமகிழ்ச்சி எங்கு இருக்கிறது தெரியுமா? இயேசு தந்து சென்ற சமாதானத்தில்தான்.ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும்.... ***No peace of mind*** . எப்படியைய்யா இருக்கு ம்...!.

கிறிஸ்துவை அறிந்திருக்கிறோம் வாழ்கிறோம் என்கிறவர்களின் குடும்பங்களிலே,வாழ்க்கையிலே,பாதைகளிலே, ஊழியங்களிலே இந்த சமாதானம் இல்லாததால் அங்கே மனமகிழ்ச்சி என்பது ஒரு கானல் நீராகவே இருக்கிறது. இருப்பது போல் காட்டிக் கொள்வார்கள்.ஆனால் இருக்காது. இது தான் உண்மை.காரணம் என்ன ? கர்மேலின் அனுபவம் நமக்கு இல்லை. கர்மேலின் அனுபவம் நமக்கு சொந்தமாக வேண்டுமென்றால் கர்மேலின் நாயகன் எலியாவின் வைராக்கியம் நமக்குள் காணப்பட்டே ஆக வேண்டும். கிறிஸ்துவின் மேல் உள்ள வைராக்கியத்தை உதட்டளவிலே நாம் நிறுத்திவிடாதபடி செயலிலே காட்ட வேண்டும். அப்பொழுது நம் தேவன் அங்கே சமாதானத்தையும்,மகிழ்ச்சியையும் கட்டளையிடுவார்.

**சிறைச்சாலைக்காரன் சிறைச்சாலையின் சம்பவத்தினால் ஆச்சரியமடைந்து தேவனில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்** (அப் 16 : 34).

விசுவாசத்தில் வளர்ந்தேறியவர்கள் அல்லது தேறினவர்கள் தயக்கத்திற்கும் , கலக்கத்திற்கும் அப்பாற்பட்டவர்கள். ஏனெனில் தேவனைக் குறித்த வைராக்கியம் அங்கே காணப்படும். கிறிஸ்துவுக்காக பணிந்தவர்களாக மட்டுமல்ல.. கிறிஸ்துவுக்குள் துணிந்தவர்களாகவும் காணப்படுவார்கள். வழா..வழா.. குழ ..குழா..அங்கே அதிகம் இருக்காது. முகங்களை பிரியப்படுத்துவதிலும் மனிதனுடைய அகங்களை பிரியப்படுத்துவதில் அதிக அக்கறையுடையவர்களாய் இருப்பார்கள். மாய்மாலம், வாய் ஜாலம், சாய்மாலம் அங்கே இருக்காது. எலியாவின் ஆவி அங்கே காணப்படும்.

**“ அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக் கும் வந்து, நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளோடு குந்தி குந்தி நடப்பீர்கள், கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள், பாகால் தெய்வமானால் அவனை பின்பற்றுங்கள் என்றான் ”** (1 இராஜா 18 : 21). எலியாவின் முடிவு என்ன தெரியுமா? சமாதானமும் மகிழ்ச்சி நிறைந்த வான் பயணம்! ஆம்,சுழல் காற்றில் உயிரோடே மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்பட்டான்.

**கிறிஸ்துவுக்காக பணிந்தவர்களாக மட்டுமல்ல.. கிறிஸ்துவுக்குள் துணிந்தவர்களாகவும் காணப்படுவார்கள். வழா..வழா.. குழ ..குழா.. அங்கே அதிகம் இருக்காது. முகங்களை பிரியப்படுத்துவதிலும் மனிதனுடைய அகங்களை பிரியப்படுத்துவதில் அதிக அக்கறையுடையவர்களாய் இருப்பார்கள்.**

அழுதுகிட்டேவா மேல போயிருப்பான்... நிச்சயமாக இல்லை. சமாதானத்தோடும் மன மகிழ்ச்சியோடும் ஆவியிலே மயங்கினவனாக வும் (திராட்சை ரசத்தின் மயக்கம்)மேலே போயிருப்பான். கிறிஸ்துவுக்குள் எல்லாவற் றிலும் வைராக்கியமா இருப்போம்.இந்த பூமிக்குரிய வாழ்க்கையாகட்டும், மறுஉலக வாழ்க்கையாகட்டும் அதுவே நமக்கு நிறை வான மனமகிழ்ச்சி.

நாம் எப்படி கர்மேலா... ? இல்லை இவ்வுலகத்தின் கார் – மேலா..? சிந்திப்பதற் காக இப்படி எழுதுகிறேன்.சிந்திப்போம்.. செயல்படுவோம்.



# 3.மறு ரூப மலை

ஆறு நாளைக்குப் பின்பு இயேசு பேதுருவையும், யாக்கோபையும், அவனு டைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக் கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின் மேல் போய்,

அவர்களுக்கு முன்பாக மறு ரூப மானார், அவர் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது.அவர்வஸ்தரம் வெளிச்சத்தைப் போல் வெண்மையாயிற்று

அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்கு காணப்பட்டார்கள்.

**“ அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி, ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது ; உமக்கு சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமு மாக, மூன்று கூடரங்களைப் போடுவோம் என்றான் ”** (மத் 17:1–4 ).

இது ஒரு உயர்ந்த மலை.அங்கே இயேசு மறுரூப மாகிறார். தோற்றம் மாறினார் (விவிலியம்) ஆகவே இதை மறுரூப மலை என்றும் அழைக்கலாம்.இங்கே இந்த மலையிலே ஒரு மாறுதலான அனுபவம். மகிழ்ச்சியான அனுபவம்,பரவசம் நிறைந்த அனுபவம். அங்கே அவர் முகம் கதிரவனைப் போல் ஒளிர்கிறது. வஸ்திரம் வெள்ளை வெளேர் உயர்ந்த மலையானதால் நல்ல குளிர்ச்சியான சூழ்நிலை. **பேதுரு, யோவான், யாக்கோபு**, மூவருக்கும் முற்றிலும் ஒரு வித்தியாசமான உள்ளத்தை குளிரவைக்கும் சிந்தை மலர்ந்து இலகுவாக்கும் ஒரு இதமான சூழ்நிலை. அங்கே கேட்டறிந்த மோசேயும் எலியாவும் கூட முக தரிசனம் கொடுக்க வந்து விட்டார்கள்.பேதுரு முடிவு பண்ணிவிட்டான். கீழே இறங்கி னால் சிலுவை, பாடு என்று ஏதேதோ இவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். பேசாமல் இங்கேயே கூடாரம் அடித்து ***Settle*** ஆகிவிடலாம் என்பது நூற்றுக்கு நூறு சதவிகிதமான மாம்ச சிந்தை.

**கவனியுங்கள், ஊழியம் உணர்ச்சிப் பூர்வத்தினால் வருவதல்ல,அது அறிவுப் பூர்வமாக செயல்படுவது. என்ன அறிவு? தேவனை அறிகிற அறிவு.**

கவனியுங்கள், இயேசு முதன்முறை தம் பாடுகளை அறிவித்தமுறையும் குறிப்பாக அதை எதிர்த்த பேதுருவை கடிந்து கொண்ட பாணியும் சீடர்களை பெரும் வருத்தத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும். ஏனெனில், சீடர்களின் எதிர்பார்ப்புகள் இயேசுவின் இந்த முன் குறிக்கப்பட்ட வெளிப்பாடுகளால் தவிடுபொடியாகி விட்டன. ஆனால் சீடர்களின் பலவீனத்தை நன்கு அறிந்திருந்த இயேசு, அவர்கள் மீது இரக்கம் கொண்டு, தம் பாடுகளுக்கும், மரணத்திற்கும் பின் வரவிருந்த தம் வெற்றியை தம் உருமாற்றத்தின் வழியாக வெளிப்படுத்துகின்றார், இயேசுவின் பாடுகளைப் பற்றி கேட்டு நொந்து போயிருந்த பேதுரு, அவருடைய வெற்றிகரமானத் தோற்றத்தில், பெருமகிழ்ச்சியடைந்து, இதே தோற்றத்தில் இயேசு நீடித்திருக்க வேண்டுமென்றும், தாங்கள் அதில் நீடிக்கவேண்டுமென்றும் விரும்பினது அவரின் அறியாமையை வெளிப்படுத்துகிறது. இது மிகவும் பரிதாபமே!

இப்படிப்பட்ட அறியாமை இன்றைய சபைகளிலும், ஊழியங்களிலும், ஊழியர் மத்தியிலும் அதிகமாக காணப்படுகிறது. பூமிக்குரியதையே நாடி நாடி அதிலேயே தங்கள் சிந்தனைகளை தந்திரமாய் புகுத்தி மாம்சீக சிந்தையிலேயே பேதுருவைப்போல தங்கள் அறியாமையை நிலைநாட்டுகிறார்கள். அநேகர் அதில் வெற்றியும் பெற்றுவிடுகிறார்கள். இப்படி அடையும் வெற்றி அநேகரை அப்படிப்பட்ட பாதைக்குள் இழுத்து, இவர் களுடைய தந்திரங்கள், அனுபவசாலிகளின் தந்திரங்களின் முன் தோற்றுப்போவதால் அநேகர் இடறி, கிறிஸ்தவத்தை கேலிப்பரி யாசமாக்கி விடுகிறதை காணமுடிகிறது. **இவர்களால் சத்திய மார்க்கம் தூஷிக்கப் படுகிறது.**

**இயேசு பேதுருவின் விருப்பத்தை உயர்த்த மலையிலிருந்து கீழே இறக்கி வைத்தார். அவன் இன்னும் எவ்வளவாய் இறங்கி வரவேண்டுமென்றும், எதையெல்லாம் தேவனுடைய இராஜ்யத்திற்காக இழக்க வேண்டுமென்றும் காண்பித்துக் கொடுத்தார்.**

கவனியுங்கள், ஊழியம் உணர்ச்சிப் பூர்வத்தினால் வருவதல்ல, அது அறிவுப்பூர்வமாக செயல்படுவது. என்ன அறிவு? **தேவனை அறிகிற அறிவு.** மறுரூப மலை கற்றுக் கொடுப்பதென்ன? இந்த பூமியையும், இந்த பூமிக்குரியதையும் விட்டொழித்து, இனி வெளிப்படப் போகும் மகிமையை காண்பதற்குரிய மனக்கண்கள் எல்லோருக்கும் தரவேண்டும். அப்போது தான் தேசங்களில் எழுப்புதல் வரும். இப்போதைய எழுப்புதல், தனிப்பட்ட நபர்களுக்குள்ளும், அவர்களுடைய ஊழியத்திற்குள்ளும், அவர்கள் பிள்ளைகளுக்குள்ளும், சந்ததிகளுக்குள்ளும் அடைபட்டு, அவர்களுடைய நோக்கமும் விருப்பமும் இவ்வுலகத்து ***Propertys, Bank Balance,*** வசதி வாய்ப்பு கள் என்ற வட்டத்திற்குள் சிறைப்பட்டு போய் விடுகிறது.

இயேசு பேதுருவின் விருப்பத்தை உயர்த்த மலையிலிருந்து கீழே இறக்கி வைத்தார். அவன் இன்னும் எவ்வளவாய் இறங்கி வரவேண்டுமென்றும், எதையெல்லாம் தேவனுடைய இராஜ்யத்திற்காக இழக்க வேண்டுமென்றும் காண்பித்துக் கொடுத்தார். இறுதியில் அவனும் சரி, சீஷர்களும் சரி கிறிஸ்துவின் எதிர்பார்ப்பில் வெற்றியும் பெற்றார்கள்.

இன்றைய கிறிஸ்துவத்திலும், ஊழியங்களிலும், ஊழியர்களிலும், ஆவிக்குரிய சபைகள் என்றழைக்கப்படுகிற சபைகளிலும் காணப்படுகிற வெட்டித்தனங்களெல்லாம் வெற்றியாக மாற நாமும் **மலைச் சிகரங்களின் வரிசையிலே** நடக்கப் பழகிக்கொள்வோம். அர்ப்பணிப்பு, வைராக்கியமும் அதனால் கிடைக்கும் மனமகிழ்ச்சியிலும், தேவனை அறிகிற அறிவிலும் நாளுக்கு நாள் நாம் வளர்ந்து பெருகுவோமாக. ஆமென் அல்லேலூயா!!

# சிந்தனைக்கு

- நாம் எதைச்செய்தாலும் அதை உணர்ந்து, மகிழ்ந்து செய்தால் அது நமக்கு எளிதாகவும் மனநிறைவாகவும் இருக்கும் (பிலி 4 : 4).
- நம் வாழ்க்கையில் குறுக்கிடும் குறைகளும் தவறுகளும் நம்மை வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு முயற்சிப்பதற்கே (நீதி14:14).
- புத்தகத்தில் பிழை வருவது இயல்பு, தொடர்ந்து படிக்கிறோம் தேவ பிள்ளைகளில் களை வளருவது இயல்பு. இடித்துவிட வேண்டாம் (மத் 18:21,22).
- ஊழியத்திலே கடினமானவைகள் என்று அநேகம் உண்டு ஆனால் முடியாதது என்று ஒன்றுமே இல்லை ( லூக் 17 : 6 ).
- பல மீறுதல்கள் நம் இளமையை மகிழ்விக்கிறது அதன் வருத்தமோ நம் முதுமை மேல் சவாரி செய்கிறது (உபா 5 : 9).
- கர்த்தர் மேல் நாம் வைக்கும் விசுவாசம் முதல் தீக்குச்சியிலே எரிந்து விட்டால் நல்லது. ஏனைய தீக்குச்சிகள் பிறரை பிரகாசிக்க வைக்க பயன்படுமே! (ஏசாயா 25 : 3).

## திரு குறள்

1. இம்மை மாறும் வகை தெரிந்து அறம் கூறும் கடவுளின் பெருமையே உலகில் சிறந்தது.
(குறள்: 23).

2. நெடுங்கடலும் குன்றும் மேகம் பொழியாவிடின் அதுபோல்
வான் ஆவியின் பொழிதல் இல்லேல் வையத்தில் சிறப்பு இல்.(குறள் :17).

3. உள்ளத் தூய்மையே உண்மை அறம் மற்றறவையெல்லாம் வீண் ஆரவாரமே!
(குறள்: 34).

4. அறம் நிறைந்த வாழ்க்கையே மெய் இன்பமும், புகழும்
மற்ற அறமற்ற செயல்கள் புகழுற்று ஓய்ந்துவிடும்
(குறள்: 39).

*திருக்குறள் உண்மை உரை*

*முனைவர்: மு. தெய்வ நாயகம் :P.h..D*

## வானவெடி

என் மகிமையை வேறொருவனுக்கும் என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன் (ஏசாயா 42 8 ) என்று வசனம் தெளிவு படுத்துகிறது.விக்கிரகங்கள் என்பது வெறும் சிலையும், சுரூபமும் மட்டுமல்ல, அவருடைய மகிமை பின்னால் தள்ளப்பட்டு, வேறெதையும் முன் வைத்தாலும் அது விக்கிரக ஆராதனையே! ஆவிக்குரிய வட்டாரத்தில் மனித புகழ்ச்சியும், ஊழியர்களை தலைமேல் தூக்கி வைத்து கொண்டாடுவதும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

ஊழியர்களை நிச்சயமாய் கனம் பண்ணித் தான் ஆக வேண்டும்.அதே நேரம் தேவன் இருக்க வேண்டிய இடத்தில் எந்த ஊழியரையும் நிற்க வைத்து அழகு பார்க்க வேண்டாம். அதனால் கிடைக்கிற உங்கள் அழகையும் பிறருக்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டாம். ▲

# கண்டதும் கேட்டதும்

இது கடைசி நாட்கள். மட்டுமல்ல, கொடிய நாட்களும்கூட. வேதத்திலே அநேக அற்புதங்கள் நடந்ததை நாம் வாசிக்கிறோம்.அவைகள் உண்மையான அற்புதங்கள். அந்த அற்புதங்களை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். ஏனெனில் தேவன் நியமித்த நியமத்தின்படி நடந்தவைகள். இப்படிப்பட்ட வழிகளேயல்லால் வேறு எந்த வழியிலும் ஒரு அற்புதம் நடக்கிறது என்றால் அது ஆராயப்பட வேண்டியது அவசியம். பிசாசானவன் மிகவும் தந்திரசாலியாக இருப்பதால் இந்த கடைசிநாட்களில் ஜனங்களின் கண்களும் இருதயமும் சத்திய வசனத்தில் நிலைத்திருக்கக் கூடாதபடிக்கு அவர்களுடைய கவனங்களை பல வழிகளிலும் திரும்பி, அங்கே சில அற்புதங்களை நடத்தி, மெய்யான பாதையிலிருந்து வழி விலக வைக்கிறான்.

பிசாசை விரட்டுகிறேன், கட்டுகளை அவிழ்க்கிறேன் என்று சிலர் Bucket ல் வாந்தி எடுக்க வைக்கிறார்கள். சிலர் துடப்பத்தை (விளக்குமார்) எடுத்து அடிக்கிறார்கள். சிலர் பாதிக்கப்பட்ட மனுஷனுடைய பாதத்தின் கட்டைவிரலை நசுக்குகிறார்கள். ப்பூ...ப்பூ... என்று ஊதுகிறார்கள்.சிலர் பிடித்து ஒரே தள்ளாய் கீழே தள்ளிவிடுகிறார்கள். கைக்குட்டையை பிடித்து விட்டால் விடுதலை என்று சிலர் தங்கள் கைக்குட்டையை கூட்டத்தில் தூக்கி எறிகிறார்கள். இப்படி பல ரகங்கள். இதெல்லாம் வேதத்தில் சொல்லப்படாத வழிமுறைகள். ஆனால் அங்கே அற்புதங்கள் நடக்கிறதா? ஆம் நடக்கிறது. ஏராளமாய் நடக்கிறது.



இதைக்கண்டுதான் ஜனங்கள் மற்றும் விசுவாசிகளின் கூட்டம் ஏகமாய் ஏமாந்து போகிறது. அது தேவனுடைய பலத்த செய்கைகள் என்று நம்பிஅநேகர் வஞ்சிக்கப்பட்டு போகிறார்கள். தேவன் நடப்பிக்கும் அற்புதங்கள் வேத வசனத்தின்படிதான் நடக்கும். மேலே நான் குறிப்பிட்ட முறைமையின்படி அற்புதங்கள் நடந்ததாக வேதப்புத்தகத்திலே எங்கும் குறிப்பிடப்படவில்லையே!

விழிப்பாயிருப்போம். பொய்யான அற்புதங்கள் மேல் அல்ல. மெய்யான தேவநீதியின் மேல் நம் இருதயத்தை பதிப்போம்.**“நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன் நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்”**( சங் 17 :15 ). ஆம், இந்த உலகத்திலே திருப்தியை தரக்கூடிய, ஒரே இடம் அவருடைய முகம் . அதுதான் அவருடைய சமூகம். நாடுவோம். தேடுவோம்.பொய்யான அற்புதங்களை விலக்கி விட்டு ஒடுவோம். விழிப்பாயிருந்து ஆவிகளை பகுத்தறிவோம். அவர் ( இயேசு )விட்டுச்சென்ற மாதிரியை பின்பற்றி அவருடைய அடிச்சுவடுகளில் நடப்போம்.சொன்னபடி இயேசு, தமது மணவாட்டியாகிய சபையை எடுத்துக்கொள்ள சீக்கிரம் வரப்போகிறார்.

**சபையே,விழித்திரு.தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள்.**




**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்து தலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த மாத இதழில் சகோதரிகளாகிய நாம் **" லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் "** என்று வேதவசனம் எச்சரிப்பதைக் குறித்து சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

**லூக்கா 17 : 31,32,33.**

**வசனம் -32- " லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள் ".**

**வசனம் 31**ல் மனுஷ குமாரன் வெளிப்படும் நாளைக்குறித்து இயேசுகிறிஸ்து சொல்லும் போது **" அந்த நாளிலே வீட்டின் மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டு திரும்பாமலும் இருக்கக்கடவன் "** என்று வாசிக்கிறோம்.இதைத் தொடர்ந்துதான் **வசனம்-32**ல் **லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்** என்றும், **வசனம்-33**ல் **"தன் ஜீவனை இரட்சிக்க வகை தேடுகிறவன் அதை இழந்து போவான். இழந்து போகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான் "** என்று வேதவசனம் ஒரு எச்சரிப்போடு கூடிய ஆலோசனையைத் தருகிறது.

ஆதியாகமம் 19 : 25,26 ல் வாசிக்கும் போது,**" அந்த பட்டணங்களையும்,அந்த சமபூமியனைத்தையும் அந்த பட்டணங்களின் எல்லாக்குடிகளையும்,பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்.அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள்"** என்று பார்க்கிறோம். இங்கே லோத்தின் மனைவியின் நிலைமை எவ்வளவு வேதனைக்குரியதாயி ருக்கிறது!! பாருங்கள்...தான் வாழ்ந்த பட்டணம்..பட்டணத்தின் ஜனங்கள்...எல்லாம் வெந்து உருகி..அத்தனையும் கருகி..பட்டணத்தின் ஜனங்களுடைய மரண ஓலம்..அலறல்கள்..குழந்தைகள் முதல் மிருக ஜீவன்கள் வரை அத்தனையும் அக்கினியில் எரிந்து சாம்பலாகிக்கொண்டிருக்கிறது .ஆனால் பட்டணத்தின் இந்த அவல நிலை...ஜனங்களின் கூக்குரல்...வேதனையின் அலறல்கள் எதுவுமே லோத்தின் மனைவியின் காதுகளில் விழவில்லை.இருதயத்தை தொடவில்லை. பட்டணமே பற்றியெறிந்துகொண்டிருக்கிற சூழ்நிலையில் கிருபையுள்ள தேவன், இரக்கமுள்ள கர்த்தர் என் ஜீவனையும் ,என் குடும்பத்தையும் காத்தாரே என்ற எந்த சிந்தனையும் இல்லை...நன்றியுணர்வும் இல்லை.மாறாக அவள் இருதயமும்,சிந்தையும் தான் வாழ்ந்த வீடும்...வீட்டிலே வாங்கி வாங்கி சேர்த்து வைத்த.. குவித்து வைத்த பொருட்கள் மேலும்,பணத்தின் மேலும் பதிந்து விட்டது. தூதன் கரத்தைப் பிடித்து பட்டணத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு வந்தும் **அவள் சரீரம்தான் பட்டணத்திற்கு வெளியே வந்ததே தவிர மனமும் சிந்தையும் அவள் இருதயம் முழுவதும் வாழ்ந்த வீட்டில்தான்....** ஆசை ஆசையாய் சேர்த்து குவித்து வைத்த பொன்,வெள்ளி,அலங்கார பொருட்கள்...ஆடம்பர பொருட்கள் மேலேயே தங்கிவிட்டது. பிள்ளைகள், தன் கணவர்... காப்பாற்றப்பட்டார்களா? என்று தன் குடும்பத்தைப் பற்றிகூட சிந்திக்க முடியவில்லை.அந்த அளவுக்கு அவள் இருதயமும் மனமும் பொருளாசையிலும்,பணஆசையிலும் ,உலகக்காரியங்களிலும் மூழ்கிப்போயிருந்தது.

ஆம்,பிரியமானவர்களே,லூக்கா12 :15 சொல்லுகிறது **பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு**

**ஜீவன் அல்ல .** அருமையானவர்களே,நாம் உண்மையாய் கர்த்தரைத் தேடும்போது நமக்கு இன்னது தேவை என்பது அவருக்கும் நன்றாகத் தெரியும். அவர் நமக்குத் தந்ததில் ஒரு திருப்தி...அல்லது ஒரு மனநிறைவுடன் வாழ்ந்து...கர்த்தரையும் அவருடைய இராஜ்யத்திற்குரியதையும் முன்வைத்து வாழும்போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களோடு கூட, உலக ஆசீர்வாதங்களாலும் நம்மை நடத்துகிற தேவன்தான். நாம் தேவனால் முன்குறிக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்கள்..இந்த பூமிக்குரியவைகளையல்ல.. மேலானவைகளையே நாடும்படி..தேடும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். கொலோ 3: 1 சொல்லுகிறது **நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால்,கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்** என்று வாசிக்கிறோம்.

நமக்குள் எழும்புகிற சின்ன சின்ன ஆசைககள்தான் இச்சையாக மாறி கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பிக்கக் கூடியதாயிருக்கிறது. சில வேளைகளில் நாம் விரும்பினதை...அல்லது நாம் இச்சித்ததை பெற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்று நம் இருதயத்தில் ஒரு துணிகரமே உண்டாகிவிடுகிறது...அதற்காக எதையும் செய்ய துணிந்து...குடும்பங்களுக்குள் விரோதங்கள், பகைகள்,கடன் சுமைகள்,கொலை, கொள்ளை,விபச்சாரம் என்று தொடர்ச்சியான அநேக பாவத்திற்குள் நடத்தி, குடும்ப உறவுகள் சிதறிப்போகிற நிலைமையும்...சிறைச்சாலைக்கே போகிற அவல நிலையே உணடாகிவிடுகிறது . இவைகளுக்கு காரணம் குடும்பத்தில் பொறுப்பேற்றிற்கும் சகோதரிகளுக்கும் இதில் பெரும் பங்கிருக்கிறது.இதைத்தான் வேதம் சொல்லுகிறது **புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக் கட்டுகிறாள் புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்** என்று (நீதி 14 :1). நம்முடைய குடும்ப உறவுகள் கட்டப்பட...நிலை நிறுத்தப்பட கர்த்தருடைய கிருபையை..அவருடைய ஞானத்தை சார்ந்திருப்போமானால் அநேக பாவங்களுக்கு நாம் நீங்கலாக்கப்படுவோம்.

இந்த கோணலும் மாறுபாடுமான சந்ததிதியிலிருநது தேவன் நம்மை வேறு பிரித்து,அவருக்கேற்ற பரிசுத்த ஜனமாக நாம் வாழ்ந்து நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளும்படியாகவே நம்மை நிறுத்தியிருக்கிறார்.அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, அழியாத நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளும்படி நாம் கிரியை நடப்பிக்கிறவர்களாக காணப்படுவோம்.

2பேதுரு 2 : 6 சொல்லுகிறது, **சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு,ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து,பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளை திருஷ்டாந்தமாக வைத்து...** (லோத்தின் மனைவியும் இதில் திருஷ்டாந்த பாத்திரமாய் மாறிப்போனாள்) லோத்தின் மனைவியின் கீழ்படியாமை அல்லது அவளுக்கு இந்த உலகத்திலும் உலகத்தின் மீதும் இருந்த பற்று, அவளாலே இந்த பூமியில், சாபத்தின் சந்ததியே உருவாக காரணமாகி விட்டாளே! ( அம்மோனியர், மோவாபியர்).நம்முடைய சந்ததி வாழ்ந்திருக்கும்படியாக தலைமுறை தலைமுறைதோறும் ஆசீர்வதித்திருக்கும்படியாக...**நாம் கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகள் எல்லாவற்றிலும் அவருக்கு பிரியமாய் வாழ நம்மை முற்றிலும் கர்த்தருக்கு அர்ப்பணிப்போம்.**

தேவன் நம்மை எப்படி வாழவைத்திருக்கிறாரோ அதில் ஒரு திருப்தி அடையக் கற்றுக் கொள்வோம்.வேதம் சொல்லுகிறது, **போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால்அது போதுமென்றிருக்கக்கடவோம்..**

நாம் தரிசித்து அல்ல...விசுவாசித்து நடக்கும்படிக்காகவே தேவன் நம்மை அழைத்திருக் கிறார்.நம்முடைய ஒவ்வொரு காரியங்களும் விசுவாசத்தினாலேயே பெற்று அனுபவிக்கக் கூடிதாய் இருக்க வேண்டும். **விசுவாசத்தினால் வராததெல்லாம் பாவமே.** அதனால் நம் ஜீவியத்தைக் குறித்து எச்சரிப்புள்ளவர்களாயிருந்து.. நம் விசுவாசத்தைக் காத்துக்கொள்வோம்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**சகோதரி : லீமா போஸ்கோ**

# ஆவியின் சிலுவைகள்

அது
குருத்தோலை ஞாயிறு!

விடிந்தும் விடியாமலும்
ஆலயம் விரைந்து
குருத்தோலைச் சிலுவை
கையில் ஏந்தி
வீதியெங்கும் பவனி வந்து-

ஊரெங்கும்
என்னை கிறிஸ்தவன் என்று
அடையாளப்படுத்தி
வீடு வந்த போது
மனசுக்குள் ஒரு மகிழ்ச்சி...
'நானும் கிறிஸ்துவுக்காய்
சிலுவை சுமந்தேன்'

இயேசு மெதுவாய் கேட்டார்
இதுவா
நீ சுமக்க வேண்டிய சிலுவை...?

நான் இயேசுவைக் கேட்டேன்
பின்னே எது...?
பாடு வியாதி
சாபம் கஷ்டம் என்னும்
சிலுவைகளைத்தான்
சுமக்க வேண்டுமா..?

இல்லை மகனே..
இவற்றையெல்லாம்
உனக்காக நான்
சிலுவையில் சுமந்தேன்

பின்னே
நான் சுமக்க வேண்டிய சிலுவை எது..?

மகனே..
உன் குடும்பத்தில்
மனைவியோடும்
பிள்ளைகளோடும் இருக்கும்போது
அன்பு - பரிவு
என்னும் சிலுவையை
சுமந்து பார்.

சபையாரை சந்திக்கும்போது
சந்தோஷம் என்னும் சிலுவை
சுமந்து நில்

சண்டைக்காரனை காணும்போது
சமாதானம் என்னும்
சிலுவை சுமந்துகொள்

உற்றார் உறவினர்
பங்காளியோடு பழகும்போது
பொறுமை என்னும்
சிலுவையை சுமந்து கொண்டிரு

எளியோரை பார்க்கும்போது
தயவு என்னும்
சிலுவையை சுமந்து கொள்

அயலாரை பார்க்கும்போது
நற்குணம் என்னும்
சிலுவையை சுமந்து செல்

மழை தாழ்ச்சியான காலங்களில்
விசுவாசம் என்னும்
சிலுவையை சுமந்து நில்

பிள்ளைகளோடு பேசும்போது
சாந்தம்-பாசம் என்னும்
சிலுவையை சுமந்து கொள்

பிறன் மனை நோக்கும்போது
இச்சையடக்கம்
என்னும் சிலுவையை
இறுகப் பற்றிக்கொள்







ஐயனே..
இதில் ஒரு சிலுவைகூட
என்னிடம் இல்லையே...


மகனே...
நான் உனக்கு தருகிறேன்
என் நுகம் மெதுவாயும்
என் சுமை இலகுவாயும் இருக்கும்
நீ என்னைப் பின்பற்றி வா
என்றார் இயேசு

இயேசுவின் கரம் பற்றி நடந்தேன்
ஆவியின் சிலுவை சுமக்க..
அப்போ... நீங்க...?

✸ ✸ ✸



**அல்பா என். ஆசைத்தம்பி (ஆவடி 9841166883)**




# அமர்ந்திருப்போம்..
# ஆண்டவருக்குள் அடங்கியிருப்போம்




வாலிபர்களே, இன்று நம்மில் அநேகருக்கு அமைதலாய் இருப்பது கடினமாய் இருக்கிறது.நம்மை சுற்றிலும் சத்தம் இருந்து கொண்டே இருக்கிறது.ஏதோ ஒரு ஒலியை கேட்டுக்கொண்டேதான் இருக்கிறோம்.அல்லது மனதில் எதை குறித்தாவது ஒரு பயம் பதட்டம் அதனால் யோசித்து கொண்டே இருக்கிறோம்.இன்றைக்கு ஆண்டவர் உங்களுக்கு சொல்ல விரும்புகிற காரியம். நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் (Äº d46 : **10** ).

அமர்ந்திருப்பது என்றால் பொறுமையோடும் அமைதலோடும் கர்த்தரின் நேரத்திற்கு, அவருடைய சித்தத்திற்கும், சத்தத்திற்கும் ஜெபத்தோடு காத்திருப்பது.

எப்படி அமர்ந்திருப்பது ?

## 1.அமைதலாய் அமர்ந்திருக்க வேண்டும்

ஒருவர் நம்மிடத்தில் எப்போது அமைதியாய் இரு என்று சொல்வார்கள்? அதிகமாக பேசிக்கொண்டிருக்கும்போதோ தேவையற்றவைகளை புலம்பிக் கொண்டி ருக்கும்போதோ அல்லது குறை கூறிக்கொண்டிருக்கும் போதோதான். அதுபோல நாம் பேசிக் கொண்டே இருந்தால் புலம்பிக்கொண்டே இருந்தால் கர்த்தர் உங்களிடம் பேச முடியாது.அவர் பேசுவது உங்களுக்கு கேட்காது.

வேதத்தில் அநேக இடங்களில் அமைதியாய் இருங்கள், அமர்ந்திருங்கள் என்று நாம் வாசிக்க முடியும். ஆண்டவரும் அமைதியை ,காத்திருப்பதை விரும்புகிறார். அவர் நம்மோடு பேச விரும்புகிறார்.எனவே அவர் சத்தத்தை கேட்பதற்கு நம் சத்ததததை நாம் அடக்க வேண்டும்.இந்த உலக சத்தங்களில் இருந்து செவியை ஆண்டவர் சத்தத்திற்கு திருப்ப வேண்டும்.மேலும் நம் சொந்த ஜெப வாழ்க்கையிலும் அநேக வேளைகளில் தேவனை துதிக்க மறந்து, நம் தேவைகளையே கேட்டுக்கொணடிருக்கிறோம்.அதனால் ஆண்டவரும் நம்மிடத்தில் சொல்ல விரும்புகிற காரியங்கள் உண்டு என்பதை நாம் மறந்து விடுகிறோம் . ஜெபம் என்பது இரு வழித் தொடர்பு. நாம் ஆண்டவருடன் பேச வேண்டும். அவரும் நம்மோடு (வேதவசனத்தின் வழியாய்) பேசுவதை கவனிக்க வேண்டும்.

ஏசாயா 30 : 15 சொல்லுகிறது , நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார். சில நெருக்கத்தின் நேரங்களில் நாம் விசுவாசத்தோடு அமர்ந்திருப்பது நம்முடைய பெலனாய் இருக்கிறது. தேவன் நம்முடைய அமைதியில் அநேக கிரியைகளை நடப்பிப்பார். வேதாகமத்தில்

1 இராஜாக்கள் 19 : 11ல் பலத்த பெருங்காற்று உண்டாயிற்று ;ஆனாலும் அந்த காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை. காற்றிற்குப் பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று ; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று . அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை;

இந்த வசனங்களில் மூன்று காரியங்களை நாம் பார்க்கிறோம்.பலத்தபெருங்காற்று , பூமி அதிர்ச்சி, அக்கினி. ஆண்டவர் எலியாவிடம் புயலின் மத்தியிலோ,எரிகிற அக்கினியின் மத்தியிலோ பேசவில்லை.எல்லாம் நின்ற பிறகே எலியா கர்த்தருடைய குரலை கேட்டார். சிந்தித்துப் பார்ப்போம். நம்மிடம் உள்ள எந்த காரியம் ஆண்டவர் நம்மோடு பேசுவதை தடுக்கிறது? நம் நண்பர்கள் கூட்டமா...? நம்முடைய வேலையா..? நம் வருமானமா..? தொலைக் காட்சியில் நேரத்தை செலவிடும் சீரியல்கள் ..சினிமாக்களா..? எது நம்மை தடுக்கிறது என்று நாம் அறிய வேண்டும்.

என்ன நடக்கிறது என் வாழ்க்கையில்? நான் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறேன் ? என் எதிர்காலம் என்ன ஆகும்? எப்படி இருக்கும்..? என்று பல காரியங்களை யோசித்துக்கொண்டிருக்கும் வாலிபர்களே..! ஆண்டவரை நோக்கி பாருங்கள்,அவர் உங்களோடுகூட பேசுவார்.அவர் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பார்.

## 2. கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார் என்பதை அறிந்து அமர்ந்திருப்போம்

யாத்திராகமம் 14 : 14 - கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள். இங்கே இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகவும் பெரிய சோதனை.. பிரச்சனையை கண்டார்கள்.பார்வோனின் சேனை அவர்களை துரத்தி கொண்டு வருகிறது. அவர்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரம் இருந்தது. சில நேரங்களில்,நம்முடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட பிரச்சனைகள் சோதனைகள் வரலாம்.அப்பொழுது அவர்களைப் போல நாமும் புலம்பாமல், இதற்கு நான் அங்கேயே இருந்து இருக்கலாமே, அப்படியே செய்திருக்கலாமே என்று குறைபடாமல், ஆண்டவர் நம்மை எங்கு எப்படி வைத்திருக்கிறாரோ அது ஒரு நோக்கத்தோடுதான்... நம்முடைய நன்மைக்காகத்தான் நடத்துகிறார் என்று விசுவாசிப்போம். 2 கொரி 4 : 18ல் பவுல் சொல்கிறபடி, நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை, கலக்கம் அடைந்தும் மனம் முறிவடைகிறதில்லை என்ற வார்த்தையினாலே திடன் கொள்ளுவோம். நம்மை எதிர்க்கிறவர்களை பதிலுக்கு பதில் செய்யாமல் கர்த்தர் நமக்காக ( வழக்காடும்படி) யுத்தம் செய்யும்படி கர்த்தர் கரத்தில் விட்டுவிடுவோம். உங்கள் பிரச்சனைகள் சமுத்திரம் போல தெரிந்தாலும் ....அமரந்திருங்கள்...கர்த்தர் நன்மையானதை வாய்க்கப்பண்ணுவார்.

## 3 . விசுவாசத்தோடு அமர்ந்திருப்போம்

மாற்கு 4 :38 ல் வாசிக்கிறபடி நாமும் இயேசுவோடு கூட படகில் பயணம் செய்த சீஷர்களை போலில்லாமல், ஆண்டவர் நம் வாழ்க்கையில் முன்பே செய்த அற்புதங்கள் அடையாளங்களை எல்லாம் எண்ணி.. இப்போதும் அவர் நம் பிரச்சனைகளை தீர்ப்பார் என்று விசுவாசிப்போம். செங்கடலைப் பிளந்து காற்றையும் கடலையும் அடக்குகிற தேவனுக்கு

முன்பாக உங்கள் பிரச்சனைகள் பெரிதல்ல. உங்கள் சோதனைகள் மத்தியில் விசுவாசத்தோடு இருந்தால் மட்டுமே உங்களால் அமர்ந்திருக்க முடியும்.

## ៤. எரிச்சல் கொள்ளாமல் அமர்ந்திருப்போம்

சங் 37 : 7- "கர்த்தரை நோக்கி அமர்ந்து,அவருக்கு காத்திரு; காரியசித்தி உள்ளவன் மேலும் தீவினைகளை செய்கிற மனுஷன் மேலும் எரிச்சல் ஆகாதே". தாவீது இங்கே உலக காரியங்களில் செழித்திருக்கிற பொல்லாதவர்கள் மற்றும் தீமை செய்கிறவர் களை குறித்து பேசுகிறார். சங்கீதத்தில் அநேக இடங்களில் பொல்லாதவர்களும் தீமை செய்கிறவர்களும் இறுதியில் அழிக்கப்படுவார்கள் தணடிக்கப்பட்டு போவார்கள் என்று சொல்கிறார். சங் 37 : 34 சொல்வது போல, அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டு போவதை நீ காண்பாய்

இன்று உங்களுக்கு தீமை செய்தவர்கள், துன்மார்க்கர்கள் செழிப்பாய் ...ஒருவேளை உலக ஆசீர்வாதங்களோடு இருக்கலாம். நாம் துன்மார்க்கர்களைக் கண்டு சோர்ந்து போக வேண்டாம். கர்த்தர் தம்முடைய நேரத்தில் நமக்குரியதை நேர்த்தியாய் செய்து முடிப்பார். இறுதியாக, சங் 73 : 23 ன் படி அவர் நமது வலது கையை பிடித்து இருக்கிறார். அமர்ந்திருக்கிற நம்மை அவர் எழுந்து நிமிர்ந்து நிற்க செய்வார். 1பேதுரு 5 : 6ன் படி, ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் நாம் அடங்கியிருப்போம்.

Bro . *Sharon Raj (Mumbai )*





நெகேமியா மையம் இரண்டாம் கட்டப் பணி
( Second Stage ) ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று
ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம் .
ஜெபியுங்கள் . உதவுங்கள் .






## கவனியுங்கள்

கடந்த மாதம் 29 பேர் எழுதியதில் 28 பேர் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள். நல்லது. தொடர்ந்து மற்றவர்களுக்கும் இந்தப் பகுதியை அறிமுகம் செய்து, வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

## வேத பகுதி

### எண்ணாகமம் : 11 முதல் 15 வரை

1.தேசத்தை வேவு பார்க்க ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து எத்தனை பேர் அனுப்பப்பட்டார்கள்?

2.அவர்களை எந்தப் பகுதியிலிருந்து அனுப்பினான்?

3.பிசைந்த மாவின் முதற் பலனை கர்த்தருக்கு எப்படி படைக்க வேண்டும்?

4.இள நீல நாடாவை எங்கே கட்ட வேண்டும்?

5.வேவு பார்க்கப்பட்ட தேசத்திற்கு ஆதரவாக பேசியவர்கள் யார்?

6.கீழ்படியாத இஸ்ரவேலர்கள் யாரால் முறியடிக்கப்பட்டு எந்த மட்டும் துரத்தப் பட்டார்கள்?

7.யோசுவா, காலேப் ஆகியோரின் தகப்பனார் பெயர் என்ன?

8.12-ம் அதிகாரத்தில் கர்த்தர் மோசேயைக் குறித்து கொடுத்த சாட்சி என்ன?

9.மிரியாம் எதினிமித்தம் மோசேக்கு விரோத மாக பேசினாள்?

10.திரட்சியான திராட்சை குலையை எடுத்த இடத்தின் பெயர் என்ன?

## கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1.அசோக் நீதிமொழி (திருவள்ளூர்).
2.மஹா (வேப்பம்பட்டு).
3.ஹெப்சி கிரி (காமராஜ் நகர்).
4.ரோஸி வினோத் (காமராஜ் நகர்).
5.ரம்யா லிவிங்ஸ்டன் (போரூர்).
6.Dr.இவான்ஜலின் ஜோன்ஸ் (சேலம்).
7.ரெஜினா பாண்டியன் (அம்பத்தூர்).
8.சரஸ்வதி தேவராஜ் (எக்மோர்).
9.லீலா ஜெயபால் (காமராஜ் நகர்).
10.இவான்ஜலின் ஜெயபால் (காட்பாடி).
11. கீதா தினேஷ் (பொத்தூர்).
12.சுகந்தி (அயப்பாக்கம்).
13.ரோஸ் மேரி (எருக்கன்சேரி).
14 .ஜாய் வெரோனிக்கா (திருநெல்வேலி ).
15.குணசீலி அப்பாத்துரை (தூத்துக்குடி).
16.எட்வினா (கோவில் பதாகை).
17.நிர்மலா டேவிட் (பூந்த மல்லி).
18.எலிசபெத் சாலொமோன் (கன்னிகா புரம்).
19.மேரி ஜெபராஜ் (மதுரை ) .
20.மோனிகா (வெள்ளானூர்).
21.ஜான்சி (கௌடிபுரம்).
22.பூஜா ரூபநாதன் (வெள்ளானூர்).
23.ஹரினி ரூபநாதன் (வெள்ளானூர்).
24.பிரியா (வெள்ளானூர்).
25.ப்ரீத்தி ( வெள்ளானூர் ).
26. பவானி ( வெள்ளானூர்).
27.மதுமிதா ( வெள்ளானூர்).
28. சீயோன் ராஜகுமாரி (வெள்ளானூர்) .

**பரிசு பெற்றவர் : பவானி (வெள்ளானூர்).**

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 28 - 4 - 2023.**